## பா.ஜ.க.வுக்கு தமிழ்நாடு மிக மோசமான முடிவைத்தான் எப்போதும் வழங்கும்!

# எப்போதுமே தி.மு.க.தான் சிறந்தது என்பது தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியும்!

## நாகப்பட்டினம் கழக இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகள் சந்திப்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!



நாகை, டிச. 22 -

**நாகை மாவட்டத்திற்குட்பட்ட நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதி கழக இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டத்தில், கழக இளைஞர் அணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**அப்போது அவர், ``நீங்கள் (பா.ஜ.க) எப்போது வந்தாலும் தமிழ்நாடு உங்களுக்கு மிக மோசமான (Worst) முடிவைத்தான் பா.ஜ.கவுக்கு வழங்கும். ஏனென்றால், எப்போதுமே தி.மு.கதான் சிறந்தது (Best) என்பது தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியும்" என்று குறிப்பிட்டார்.**

கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

கழக இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகள் அனைவருக்கும் என் அன்பும் வாழ்த்தும். அதிக நேரம் பேச விரும்பவில்லை. ஏற்கனவே 11 மணியிலிருந்து அரங்கம் நிறைந்து நீங்களெல்லாம் காத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று நம்முடைய இளையராஜா அவர்களும், கௌதமன் அவர்களும் தொடர்ந்து என்னிடத்தில் நினைவூட்டிக் கொண்டே இருந்தார்கள்.

### மகிழ்ச்சியும் எழுச்சியும்

11 மணி என்று சொல்லிவிட்டு, இவன் காலையில் 10 மணிக்குத்தான் சென்னையிலிருந்து வீட்டை விட்டே கிளம்பியிருக்கிறான் என்று நீங்கள் தவறாக நினைத்து க்கொள்ளக் கூடாது. நேற்று மாலையிலிருந்தே திருவாரூரில் பல்வேறு நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு, நேற்று இரவு 10 மணிக்கெல்லாம் நான் வந்துவிட்டேன்.

இருந்தாலும் காலையில் அரசு நிகழ்ச்சிகள், நம்முடைய இசைமுரசு நாகூர் ஹனிபா அவர்களுடைய நூற்றாண்டு நிகழ்ச்சி எனப் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இங்கே வருவதற்குத் தாமதமாகிவிட்டது. அதுமட்டுமல்ல, இங்கே வருகை தந்திருக்கின்ற உங்கள் அனைவரின் முகத்திலும் மிகுந்த மகிழ்ச்சியும் எழுச்சியும் தெரிகிறது.

நாகப்பட்டினம் மாவட்டம், நாகை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வட்டம், கிளை, இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர் மற்றும் பாக (Booth) அமைப்பாளர்களுக்கான இந்த அறிமுகக் கூட்டம் மிகச் சிறப்பாக இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் இன்னொரு கூடுதல் சிறப்பு என்னவென்றால், 2023ஆம் ஆண்டு இந்த `தளபதி அறிவாலயம்' கட்டடத்திற்கு அண்ணன் கௌதமன் அவர்கள் ஏற்பாட்டின் பேரில் நான்தான் அடிக்கல் நாட்டினேன். இன்று அது ஒரு கட்டடமாக, ஒரு அரங்கமாக மாறி, தலைவர் அவர்கள் சில மாதங்களுக்கு முன்பு திறந்து வைத்த பிறகு, முதல் இளைஞர் அணி நிகழ்ச்சியாக இந்த நிர்வாகிகள் சந்திப்பு இந்த அரங்கத்தில் நடைபெறுகிறது.

எத்தனையோ மாவட்டங்களுக்குச் சென்றாலும், இந்த நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு வரும்போது மட்டும் ஒரு தனி உற்சாகம், தனிப் பிரியம், தனி மகிழ்ச்சி எனக்கு ஏற்படும். ஏனென்றால், இது கலைஞரின் மாவட்டம், இது நம்முடைய தலைவருடைய மாவட்டம், இது என்னுடைய சொந்த மாவட்டம். அதனால்தான் எப்பொழுதுமே நாகப்பட்டினம் வரும்போது மற்ற மாவட்டங்களுக்குச் செல்வதை விடக் கூடுதல் எழுச்சி இருக்கும். சொந்தக்காரர்களைப் பார்ப்பது போல் இருக்கும். அண்ணன், தம்பி, மாமன், மச்சான் என சொந்தக்காரர்கள் வீட்டுக்குச் சென்றது போன்ற ஒரு தனிப் பிரியம் இருக்கும்.

அதுமட்டுமல்ல, இது இளைஞர் அணி நிகழ்ச்சி என்னும்போது கூடுதல் சிறப்பு. பலமுறை சொல்லியிருக்கிறேன், இங்கேயும் சொல்ல விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர், விளையாட்டுத்துறை அமைச்சர், துணை முதலமைச்சர் என எத்தனையோ பொறுப்புகள் வந்திருந்தாலும், என்னிடம் உங்களுக்கு மனதிற்கு நெருக்கமான பொறுப்பு எது என்று யார் கேட்டாலும், 'திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர்' என்பதுதான் என்னுடைய மனதிற்கு மிகவும் பிடித்த பொறுப்பு என்பதை எப்பொழுதுமே தைரியமாக, உரிமையோடு சொல்வேன்.

### மிகப்பெரிய வரலாறு

இந்த நிகழ்ச்சியில் உங்களைச் சந்திக்கின்ற வாய்ப்பை அளித்த மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் கௌதமன் அவர்களுக்கும், மாவட்டப் பொறுப்பு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும், இளைஞர் அணித் துணைச் செயலாளர் இளையராஜா அவர்களுக்கும், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் என வந்துள்ள அனைவருக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு கட்சிக்கும் வரலாறு இருக்கிறது, சில கட்சிகளுக்கு வரலாறே இல்லை. நான் யார் என்றெல்லாம் சொல்ல விரும்பவில்லை. ஆனால் நம்முடைய இயக்கத்தில் மட்டும்தான் நம்முடைய இளைஞர் அணிக்கு என்று ஒரு மிகப்பெரிய வரலாறு இருக்கிறது.

1980ஆம் ஆண்டு மதுரை, ஜான்சி ராணி பூங்காவில் நம் கலைஞர் அவர்களின் வாழ்த்துகளோடு நம்முடைய தலைவர் அவர்கள் இளைஞர் அணியைத் தொடங்கினார். 45 ஆண்டுகால வரலாறு நம்முடைய இளைஞர் அணிக்கு மட்டும்தான் உண்டு. இந்தியாவில் வேறு எந்த அணிக்கும் அப்படி ஒரு வரலாறு கிடையாது.

இன்று பல்வேறு இயக்கங்களில் அணிகள் தொடங்குகிறார்கள். ஆனால் இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு இயக்கத்தில் 'இளைஞர் அணி' என்று தொடங்கியது நம் திராவிட முன்னேற்றக் கழகம். அதைத் தொடங்கியது இப்பொழுது நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவராக இருக்கக்கூடிய நம்முடைய தலைவர் அவர்கள்தான். இப்படி இந்தியாவுக்கே முன்னோடியாக இருக்கின்ற தி.மு.க இளைஞர் அணி இன்று சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருப்பதற்கு இங்கு வந்திருக்கின்ற நிர்வாகிகள் நீங்கள்தான் காரணம்.

### முதன்மை அணி

நம் இயக்கத்தில் பல்வேறு அணிகள் இருந்தாலும் கலைஞர் அவர்களால் 'முதன்மை அணி' என்று பாராட்டைப் பெற்றது நம் இளைஞர் அணிதான். வரலாறு பெற்ற இளைஞர் அணியில் இருப்பது நமக்கெல்லாம் மிகப்பெரிய பெருமை. இளைஞர் அணி இந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்றால், அதற்கு வருகை தந்திருக்கின்ற மாவட்ட, பகுதி, பேரூர், ஒன்றிய அமைப்பாளர்கள் உங்களின் வழி நடத்தலும் மிக மிக முக்கியமான ஒரு காரணம்.

இன்று இந்தியாவில் பல கட்சிகள் பூத் கமிட்டி அமைக்கவே திண்டாடிக்கொண்டிருக்கும் போது, நம்முடைய இளைஞர் அணி இன்று ஒரு பூத்திற்கு ஓர் அமைப்பாளரை நியமித்திருக்கிறது. புதிதாகப் பொறுப்பிற்கு வந்திருக்கின்ற நீங்கள் ஏதோ ஒருவரின் பரிந்துரையின் பெயரால் வரவில்லை. முழுக்க முழுக்க உங்களுடைய உழைப்பின் மூலமாகத்தான் வந்திருக்கிறீர்கள்.

மாவட்டச் செயலாளரிடம், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களிடம் பரிந்துரைக் கடிதங்கள் எல்லாம் வாங்கினோம். ஆனால் அவர்கள் கொடுத்த கடிதத்தை மட்டும் வைத்து அப்படியே அறிவிப்பு வரவில்லை. அன்பகத்தில் இதற்கென்றே தனியாக ஒரு சிறப்புக் குழு அமைக்கப்பட்டு, பரிந்துரை செய்யப்பட்ட நபர்கள் ஒவ்வொருவரையும் தொலைபேசியில் தனித்தனியாக அழைத்து பேசினோம். அப்படிப் பேசும்போது உங்களின் பின்னணி, கொள்கைப் பற்று, கழக உணர்வு, சமூக வலைதளங்களில் நீங்கள் எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறீர்கள் இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் இன்று உங்களைப் பொறுப்பிற்குச் சேர்த்திருக்கிறோம். எனவே உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது பதவி கிடையாது, பொறுப்பு என்பதை நீங்கள் உணர்ந்து சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் நிச்சயம் ஒரு வாக்குறுதியைத் தருகிறேன். இளைஞர் அணியில் நீங்கள் சரியாக உழைத்தீர்கள் என்றால், நிச்சயம் உங்களுக்கான சரியான அங்கீகாரத்தைச் சரியான நேரத்தில் நம் தலைவர் அவர்கள் உங்களுக்குக் கொடுப்பார். அதற்கு ஒரு சிறந்த உதாரணம் இங்கே இருக்கக்கூடிய இந்த மேடை.

இங்கே மாவட்டப் பொறுப்பு அமைச்சராக இருக்கக்கூடிய நண்பர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் இளைஞர் அணியிலிருந்து வந்து, இன்று மாவட்டக் கழகச் செயலாளராக, தமிழ்நாட்டின் பள்ளிக்கல்வித்துறை அமைச்சராகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார் என்றால், இளைஞர் அணியில்தான் அவர் பயிற்சி எடுத்தார். இந்த மண்டலத்தின் பொறுப்பாளர் சகோதரர் இளையராஜா அவர்கள், மாவட்டத் துணை அமைப்பாளராகப் பணியாற்றி, அதன்பிறகு மாவட்ட அமைப்பாளராகப் பணியாற்றி, இன்று மாநில இளைஞர் அணியின் துணைச் செயலாளராக நம்முடைய தலைவர் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான். இன்று இளைஞர் அணியில் அவரின் பணிகளைப் பார்த்துதான் தலைவர் அவர்கள் அவருக்குத் தாட்கோ தலைவராக மக்கள் பணியாற்றும் வாய்ப்பை வழங்கியுள்ளார்.

### சிறப்பான செயல்பாடு

நாகை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சகோதரர் கார்த்திக் அவர்கள், 2012இல் ஒருங்கிணைந்த திருமருகள் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராகச் சிறப்பாகச் செயல்பட்டவர். அதன்பிறகு நம் தலைவர் அவர்கள் கார்த்திக் அவர்களை கடந்த 2018ஆம் ஆண்டு மாவட்டத் துணை அமைப்பாளராக உயர்த்தினார்கள். தொடர்ந்து அவரின் சிறப்பான பணிகளைப் பார்த்து, இன்று நம் தலைவர் அவர்கள் அவரை மாவட்ட அமைப்பாளராக உயர்த்தியுள்ளார்கள். இங்கே வருகை தந்து அமர்ந்திருக்கின்ற ஐந்து துணை அமைப்பாளர்களும் ஒவ்வொரு பொறுப்பிலிருந்து உயர்ந்து, அவர்களின் சிறப்பான செயல்பாட்டினால் இன்று மாவட்டத் துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த வேதாரண்யம் உதயம் முருகையன், திருக்குவளை மலர் வண்ணன், தலைஞாயிறு குமார் எல்லாருமே இன்று இளைஞர் அணியில் பயிற்சி எடுத்து, இன்று ஒன்றியச் செயலாளராக உயர்ந்து கழகப் பணியைச் செய்து வருகிறார்கள்.

### பயிற்சிக் களம்

இந்த மாவட்டம் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இளைஞர் அணியில் பணியாற்றியவர்கள்தான் இன்று கழகத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதிக் கழகச் செயலாளராகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட இளைஞர் அணி என்பது ஒரு பயிற்சிக் களம். பயிற்சி எடுக்கும் இடம்தான் இளைஞர் அணி என்ற இந்தப் பொறுப்பு. அதுமட்டுமல்ல, இன்று தமிழ்நாட்டில் சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, மேயர்களாக, உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களாக மக்கள் பணியாற்றி கொண்டிருக்கக்கூடியவர்கள் இளைஞர் அணியில் பயிற்சி எடுத்தவர்கள்.

இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், இன்று தமிழ்நாட்டின் முதலமைச்சரையும் கழகத்தின் தலைவரையும் கொடுத்திருப்பது நம் இளைஞர் அணி என்பதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த, வரலாறு நிறைந்த, கொள்கை நிறைந்த இளைஞர் அணிக்கு இப்பொழுது நீங்கள் வந்திருக்கிறீர்கள். நீங்கள் உழைக்கத் தயாராக இருந்தால், உங்களை உயர்த்த நாங்கள் தயாராக இருக்கிறோம். இன்று நீங்கள் மேடைக்குக் கீழ் அமர்ந்திருக்கலாம், நாங்கள் மேடைக்கு மேல் அமர்ந்திருக்கலாம். ஆனால், நாளை உங்களுடைய செயல்பாட்டின் மூலம் நீங்கள் அனைவரும் மேடைக்கு மேல் வர வேண்டும். அதற்கு மேடையில் இருக்கும் நாங்கள் உங்களுக்கு வழிவிட வேண்டும்.

முரசொலியில் பெயர் வந்துவிட்டது. மூன்று நாட்களுக்கு முன்பே வாட்ஸ்அப்பில் மின்னணுத் தாளில் வந்திருக்கும், உங்கள் பெயர்களெல்லாம் முரசொலியில் வந்திருக்கும். இன்று உங்கள் கைகளிலேயே அந்த முரசொலி அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. ஏதோ பொறுப்பு வாங்கிவிட்டோம், நான்கு விளம்பரப் பலகைகள் வைத்தோம், வாட்ஸ்அப்பில் ஸ்டேட்டஸ் போட்டோம் என்று நம் பணிகள் இருந்துவிடக் கூடாது. உங்கள் ஒவ்வொரு பணியையும் சிறப்பாக நீங்கள் அமைத்துக்கொள்ள வேண்டும்.

### மினிட் புத்தகம்

ஒவ்வொரு பணியையும் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அந்த மினிட் புத்தகத்தில் (Minute Book) நீங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டும். எந்த நிகழ்ச்சியில் நீங்கள் கலந்துகொண்டாலும், அல்லது நடத்தினாலும், அதைப் பதிவு செய்து அந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்திருப்பவர்களிடம் கையெழுத்து வாங்குவது மிக மிக முக்கியம்.

நிர்வாகிகள் உங்களின் செயல்பாடுகளில் ஒரு சிறிய தவறுக்குக் கூட நீங்கள் இடம் கொடுத்துவிடக் கூடாது. மிகவும் கவனமாக நீங்கள் செயல்பட வேண்டும். ஏனென்றால், இன்று இருக்கக்கூடிய எதிர்க்கட்சியாக இருக்கட்டும், செய்தித் தொலைக்காட்சிகளாக இருக்கட்டும், ஏதாவது ஒரு சிறிய தவறு நடந்துவிடாதா என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக தி.மு.க நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் ஏதாவது சிறிய தவறு செய்துவிட மாட்டார்களா என்று கவனிக்கிறார்கள். ஏதாவது ஒரு சிறிய தவறு நடந்தால் கூட அதைப் பெரிதாக்கி, மக்கள் மத்தியில் தி.மு.கவிற்கு இவ்வளவு கெட்ட பெயர் இருக்கிறது என்று காட்ட முயற்சி செய்கிறார்கள். எனவே நிர்வாகிகள் நீங்கள் அனைவரும் என்ன செயல் செய்தாலும், அது கழக நிகழ்ச்சியாக இருந்தால் நிச்சயம் அதில் கட்டுப்பாட்டோடு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### 100 வாக்காளர்கள்

நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் பகுதியில், பாகத்தில் (Booth), பொறுப்பில் இருக்கக்கூடிய குறைந்தது ஒரு 50 லிருந்து 100 வாக்காளர்களை உங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்தீர்கள் என்றால், நிச்சயம் உங்களுடைய வளர்ச்சியை யாராலும் தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாது. யாராக இருந்தாலும் உங்களுடைய உதவி வேண்டும் என்று உங்களிடம் வந்துதான் ஆக வேண்டும். அந்த 100 வாக்காளர்களை நீங்கள் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்றால் உங்களுடைய மக்கள் பணி சரியாக அமைய வேண்டும்.

மக்களோடு மக்களாகப் பயணியுங்கள். மக்கள் கூடவே இருங்கள். உங்களுக்கு வழங்கப்பட்டிருப்பது ஒரு பொறுப்பு, அந்தப் பொறுப்பிற்காகவே நீங்கள் மக்களிடம் சென்று அவர்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேளுங்கள். அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்லுங்கள். பொதுமக்களின் கோரிக்கைகளை உங்களால் செய்து கொடுக்க முடிந்தால், நீங்கள் செய்து கொடுத்துவிடுங்கள். அப்படி இல்லை என்றால் உங்களுக்கு மேல் பொறுப்பில் இருக்கும் உங்கள் அமைப்பாளரோ, ஒன்றிய அமைப்பாளரோ அவர்களிடம் சொல்லுங்கள். உங்கள் மாவட்டக் கழகச் செயலாளர், மாவட்ட அமைப்பாளரிடம் அதைக் கொண்டு சென்று அந்தப் பணியைச் செய்து கொடுப்பதற்கான பணிகளில் நீங்கள் ஈடுபடுங்கள். இப்படிச் செய்தீர்கள் என்றால், நிச்சயம் 50லிருந்து 100 வாக்காளர்கள் உங்களை நம்பி உங்கள் பின்னால் வருவார்கள். ஆனால், தயவுசெய்து எந்தப் பணியைச் செய்தாலும் மாவட்ட, ஒன்றிய அமைப்பாளர்களின் அனுமதி பெற்று அவர்களின் ஆலோசனையைப் பெற்றுச் செய்யுங்கள்.

### சமூக வலைதளங்கள்

களத்தில் எவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கிறீர்களோ, அதேபோலச் சமூக வலைதளங்களிலும் நாம் சுறுசுறுப்பாக இருக்க வேண்டிய காலகட்டம் இப்பொழுது வந்திருக்கிறது. சுறுசுறுப்பாக இருங்கள் என்றால், நான் ஏதோ பொய் செய்தியைப் பரப்புங்கள், வதந்தியைப் பரப்புங்கள் என்று சொல்லவில்லை. நம் இயக்கத்திற்கு வரலாறு இருக்கிறது, அரசின் சாதனைகள் இருக்கின்றன. நம் மீது வைக்கப்படுகின்ற பொய்ப் பிரச்சாரங்களுக்குச் சரியான பதிலடிகள் நம்மிடம் இருக்கின்றன. அதைச் சமூக வலைதளங்களில் தயவுசெய்து உங்களுக்குத் தெரிந்தவர்கள், நண்பர்கள், குடும்பத்தினரிடம் பகிருங்கள்.

அன்பகத்திலிருந்து உங்களுக்குத் தொடர்ந்து தகவல்கள் வழங்கப்படும். அதைப் பின்பற்றுங்கள். தலைவரின் பக்கம், இளைஞர் அணியின் பக்கம், உங்கள் மாவட்ட அமைப்பாளர், மாவட்டச் செயலாளர் பக்கங்கள் அனைத்தையும் பின்தொடருங்கள். தினமும் காலையில் ஒரு 10 நிமிடம் ஒதுக்கி முரசொலி இதழைத் தயவுசெய்து படித்து விடுங்கள். முரசொலி இதழைப் படித்தீர்கள் என்றால் அன்றைய அரசியல், அன்றைய நிகழ்வுகளை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். தி.மு.க ஏன் இந்த முடிவை எடுத்திருக்கிறது? தலைவர் ஏன் இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்? அன்றைய அரசியல் நிகழ்வு என்ன? அதில் நம் நிலைப்பாடு என்ன? என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இளைஞர் அணிக்கு என்று தனியாக நம் தலைவர் அவர்கள் ஒரு பக்கம் ஒதுக்கியிருக்கிறார் முரசொலியின் கடைசிப் பக்கம், 'பாசறை பக்கம்'. படிப்பதற்கு மிக மிக எளிதாக இருக்கும். சிறிய செய்திகள், அரசின் சாதனைகள் என எளிமையாக இருக்கும். அதைத் தயவுசெய்து படியுங்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் வருகை தந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு என் வேண்டுகோள். புதிதாகப் பொறுப்பிற்கு வந்திருக்கின்ற புதிய நிர்வாகிகளுக்கு அரசியல் அனுபவம் நிச்சயமாக இருக்காது. புதிய நிர்வாகிகள், தம்பிகள் ஏதேனும் தெரிந்தும் தெரியாமலும் ஒரு சிறிய தவறு செய்தால், நெறிமுறைகள் தெரியாமல் நடந்துகொண்டால் தயவுசெய்து அவர்களைப் புறக்கணித்து விடாதீர்கள். அவர்களுடன் இருந்து அவர்களை வழிநடத்தி, எந்தப் பணியை எப்படிச் செய்ய வேண்டும் என்று அவர்களுக்கு வழிகாட்டுங்கள்.

### 5 லட்சம் நிர்வாகிகள்

இன்று தமிழ்நாடு முழுவதும் நகர, பேரூர் வார்டுகள், ஊராட்சிக் கிளைகள் எனப் பாகம் தோறும் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களை நாம் தொடர்ந்து நியமனம் செய்து வருகிறோம். இன்று நாகப்பட்டினம் தொகுதியில் மட்டும் கிட்டத்தட்ட 1,100 நிர்வாகிகள் வந்திருக்கிறீர்கள். இப்படி தமிழ்நாடு முழுவதும் நியமனம் செய்தால் கிட்டத்தட்ட 5 லட்சம் நிர்வாகிகள் நம் இளைஞர் அணிக்கு மட்டும் வருவார்கள்.

சமீபத்தில் தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள், வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நடத்தினோம். 91 தொகுதிகளிலிருந்து கிட்டத்தட்ட 1 லட்சத்து 40 ஆயிரம் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். 5 லட்சம் நிர்வாகிகளை மட்டும் நாம் நியமித்தோம் என்றால், இந்தியாவிலேயே எந்த இயக்கமும் செய்யாத சாதனை ஒரு கழகத்தின் இளைஞர் அணிக்கு நிர்வாகிகள் மட்டும் 5 லட்சம் பேர் என்பது.

இந்த ஒவ்வொரு நிர்வாகியும் ஒரு 10 இளைஞர்களைத் தங்கள் கூட வைத்திருந்தால், 50 லட்சம் இளைஞர்கள், 50 லட்சம் வாக்காளர்கள் நம் இயக்கத்திற்காக உழைத்துக் கொண்டிருப்பார்கள். இது ஏதோ வெறும் தேர்தலுக்காக நடத்துகின்ற ஒரு செயல்முறை கிடையாது. அடுத்து வருகின்ற தமிழ்நாட்டின் தலைமுறை சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக நாம் எடுக்கக்கூடிய முயற்சி. இன்று பல இளைஞர்கள் எந்த இயக்கத்தில் சேர வேண்டும் என்று சில குழப்பத்தில் இருக்கிறார்கள். அவர்களின் குழப்பத்திற்கு காரணம் அவர்களுக்கு வரலாறு தெரியாதது, அரசியல் அறிவு இல்லாதது, எந்தக் கொள்கையும் இல்லாததுதான். அப்படிப்பட்ட மாற்றுக் கட்சியில், எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய இளைஞர்களையும் சந்தித்துப் பேசுங்கள். அவர்களிடம் நம் இயக்கத்தின் வரலாறுகளை, நாம் செய்திருக்கக்கூடிய தியாகங்களை, இந்த நான்கரை ஆண்டுகளில் இந்த அரசு, நம்முடைய முதலமைச்சர் செய்திருக்கக்கூடிய சாதனைகளை, திட்டங்களைக் கொண்டு சேர்க்குங்கள். கருத்தியல் ரீதியாகவும் தி.மு.க இளைஞர் அணி செய்திருக்கக்கூடிய பணிகளை எடுத்துச் சொல்லுங்கள்.

ஒவ்வொரு தொகுதியிலும் கலைஞர் நூற்றாண்டு நூலகம். பொதுமக்களுக்குப் பயன்பட வேண்டும், போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகிறவர்கள் வந்து படிக்க வேண்டும் என்று ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு நூலகத்தைத் திறக்க நம் முதலமைச்சர் அவர்கள் இளைஞர் அணிக்கு அறிவுறுத்தினார். இன்று கிட்டத்தட்ட 100 சட்டமன்ற தொகுதிகளில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் தி.மு.க இளைஞர் அணி திறந்திருக்கிறது.

தலைவர் அவர்கள் கடந்த ஆண்டு இன்னொரு இலக்கு கொடுத்தார். இளம் பேச்சாளர்களைத் தேர்வு செய்து கொடுங்கள் என்றார். 100 இளம் பேச்சாளர்கள் வேண்டும் என்று தலைமையிலிருந்து உத்தரவிட்டார்கள். தமிழ்நாடு முழுவதும் மாவட்ட அமைப்பாளர்கள் சுற்றிச் சுழன்று, பேச்சுப் போட்டிகள் நடத்தி, சிறந்த 200 இளம் பேச்சாளர்களைத் தேர்வு செய்து தலைமைக்குக் கொடுத்திருக்கிறோம். இன்று அந்த 200 இளம் பேச்சாளர்களும் தமிழ்நாடு முழுவதும் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். கழகத்தின் பொதுக்கூட்டங்களில் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

### மாணவர் பத்திரிகையாளர்

கலைஞர் மாணவர் பத்திரிகையாளர் திட்டத்தைத் தொடங்கியிருக்கிறோம். எதிர்காலப் பத்திரிகையாளர்களை உருவாக்குவதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கிறோம். அதேபோல தி.மு.க75, கழகத்தின் 75வது பிறந்தநாள்நிகழ்ச்சியையொட்டி'காலத்தின்நிறம்கருப்புசிவப்பு' என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டிருக்கிறோம். அறிவுத் திருவிழா சமீபத்தில் சென்னையில் நடத்தினோம். அடுத்தடுத்த ஆண்டுகளில் வெவ்வேறு மாவட்டங்களில் நடத்த இருக்கிறோம். கிட்டத்தட்ட ஒன்பது நாட்கள் புத்தகக் கண்காட்சி நடைபெற்றது.

இப்படிப் பல்வேறு முன்னெடுப்புகளை இளைஞர் அணி சார்பாக நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் உங்களுடன் இருக்கக்கூடிய நண்பர்கள், உங்கள் குடும்பத்தில் இருக்கக்கூடிய இளைஞர்களிடம் பகிருங்கள். "தி.மு.க இதைச் செய்திருக்கிறது. நீ சொல்கிறாயே உன்னுடைய இயக்கம், உன்னுடைய கட்சி என்று, நீங்கள் இளைஞர்களுக்கு என்ன செய்திருக்கிறீர்கள்? இளைஞர்களை அரசியல்படுத்த நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? என்று தைரியமாகக் கேளுங்கள்.

இந்தப் பணிகளையெல்லாம் நீங்கள் இளைஞர்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும். கழகத்திற்கு இன்னும் புதிய இளைஞர்களை அழைத்து வர வேண்டும். நாம் வெறும் கைதட்டி, விசில் அடித்துக் கலைகின்ற கூட்டம் கிடையாது என்பதை மக்களுக்கு நாம் நிரூபித்துக் காட்டியாக வேண்டும். இது தந்தை பெரியார் அவர்களையும், பேரறிஞர் அண்ணா அவர்களையும், கலைஞர் அவர்களையும் கொண்ட கொள்கைக் கூட்டம். அவர்கள் கற்றுக் கொடுத்ததை மக்களிடம் கொண்டு போய் சேர்க்கக்கூடிய கொள்கைக் கூட்டம் என்பதை இந்தத் தேர்தலில் நாம் மக்களுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டும்.

### திராவிட மாடல் அரசு

நம்மிடம் கொள்கை இருக்கிறது, அரசின் சாதனைகள் இருக்கின்றன. எத்தனையோ திட்டங்கள் விடியல் பயணத் திட்டம், முதலமைச்சர் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், இல்லம் தேடி கல்வி திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் என இந்தியாவே பாராட்டுகின்ற பல்வேறு திட்டங்களை நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதைப் பொறுக்க முடியாமல், மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு இருப்பதைப் பார்த்துதான் இன்று ஒன்றிய பா.ஜ.க அரசு பல்வேறு தொல்லைகளை நம்முடைய அரசுக்கு, குறிப்பாக நம்முடைய முதலமைச்சருக்கும் தமிழ்நாட்டுக்கும் கொடுக்கிறார்கள்.

புதிய கல்விக் கொள்கை என்று மீண்டும் மும்மொழிக் கொள்கையைத் தமிழ்நாட்டிற்குள் திணிக்கப் பார்க்கிறார்கள். அதுமட்டுமல்ல, தொகுதி மறுவரையறை என்று சொல்லி, நம் 39 தொகுதிகளைக் குறைப்பதற்கான வழிகளில் ஈடுபடுகிறார்கள். இந்தியையும் சமஸ்கிருதத்தையும் மீண்டும் தமிழ்நாட்டிற்குள் கொண்டு வருவதற்குப் பல முயற்சிகள் செய்கிறார்கள்.

இப்பொழுது புதிதாக எஸ்.ஐ.ஆர் (SIR) திட்டத்தையும் செயல்படுத்தியிருக்கிறார்கள். முன்பெல்லாம் தேர்தலில் முறைகேடு செய்வார்கள், இன்று பா.ஜ.க தேர்தலையே ஒரு முறைகேடாக நடத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சிறுபான்மையினர், மகளிர், ஒடுக்கப்பட்ட மக்களின் வாக்குகளை நீக்க வேண்டும் என்று பா.ஜ.க ஒவ்வொரு மாநிலத்திலும் இந்த எஸ்.ஐ.ஆர் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நேற்றுதான் அந்த வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. சுமார் 98 லட்சம் வாக்காளர்களைப் பல்வேறு காரணங்களைக் காட்டித் தேர்தல் ஆணையம் நீக்கியிருக்கிறது.

இந்த நாகை மாவட்டத்தில் மட்டும் 58,000 வாக்குகளை நீக்கியிருக்கிறார்கள். இப்பொழுது வெளியே வந்திருப்பது வெறும் வரைவுதான். வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்கள் மறுபடியும் விண்ணப்பிப்பதற்கு ஜனவரி 18ஆம் தேதி வரை நமக்கு நேரம் இருக்கிறது. ஏற்கனவே படிவம் கொடுத்தும் விடுபட்டுள்ள பெயர்களைச் சேர்க்க, இளைஞர் அணி தம்பிமார்கள் களத்தில் சென்று அதைச் சரிபார்த்து, அவர்களுக்கான உதவிகளைச் செய்ய வேண்டும்.

### தகுதியுள்ள வாக்காளர்

இறுதி வாக்காளர் பட்டியல் வரும்போது தகுதியுள்ள ஒரு வாக்காளர் கூட வாக்குரிமை இல்லாமல் இருக்கக்கூடாது என்ற நிலையை நாம் ஏற்படுத்த வேண்டும். இன்று குஜராத்தில் அமர்ந்துகொண்டு ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்கள் நம்மை மிரட்டப் பார்க்கிறார். பீகாரில் சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று விட்டார்கள். ``அடுத்து தமிழ்நாடுதான் என்று மிரட்டுகிறார். நம்முடைய முதலமைச்சர் பெயரைச் சொல்லியே மிரட்டுகிறார். அடுத்து இல்லை, பா.ஜ.க எப்பொழுது வந்தாலும் தமிழ்நாடு உங்களுக்கு மிக மோசமான (Worst) முடிவைத்தான் பா.ஜ.கவிற்கு வழங்கும். ஏனென்றால் எப்பொழுதுமே தி.மு.கதான் சிறந்தது (Best) என்பது தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியும்.

நீங்கள் வடநாட்டில் வெற்றி பெற்றுக்கொண்டே இருக்கலாம். ஆனால் என்றைக்கும் தமிழ்நாடு பக்கம் உங்களால் கால் வைத்துக்கூடப் பார்க்க முடியாது. ஏனென்றால், நம்முடைய தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்வது போல, தமிழ்நாடு என்றைக்கும் டெல்லிக்கு `அவுட் ஆஃப் கண்ட்ரோல்' (Out of control) ஆகத்தான் இருக்கும்.

அமித் ஷா அவர்களும், மோடி அவர்களும் உருட்டி மிரட்டுகிறார்கள். ஆனால், அதற்கெல்லாம் பயப்படுகிற கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் கிடையாது. கருப்பு சிவப்பு கொடி பிடித்திருக்கக்கூடிய கடைசித் தொண்டன் இருக்கும் வரை சங்கிக் கூட்டத்தால் தமிழ்நாட்டிற்குள் நுழையவே முடியாது என்ற நிலையை நாம் உருவாக்கிக் காட்ட வேண்டும்.

நேற்று நம் அரசு நடைமுறைப்படுத்த இருக்கக்கூடிய மடிக்கணினி வழங்கும் திட்டத்தைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். தேர்தல் வந்துவிட்டது, அந்தப் பயத்தில் திடீரென்று மடிக்கணினி திட்டத்தைத் தி.மு.க அரசு எடுத்திருக்கிறது என்று எடப்பாடி பழனிசாமி அவர்கள் சொல்லியிருக்கிறார்.

நம்முடைய 20252026 நிதிநிலை அறிக்கையிலேயே, கிட்டத்தட்ட மார்ச் மாதமே இதை அறிவித்து, 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப் போகிறோம் என்று நிதி அமைச்சர் சட்டமன்றத்திலேயே அறிவித்தார். அறிவித்தது மட்டுமல்ல, அந்தப் பணிகளெல்லாம் நடைபெற்று இன்னும் சில நாட்களில் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்க இருக்கிறோம்.

### மாணவர்களின் வருங்காலம்

இப்பொழுது எடப்பாடி பழனிசாமி நேற்று அறிக்கையில் கட்டமைப்பு (Configuration) சரியில்லை, தொழில்நுட்ப விவரங்கள் (Specification) போதாது என்று ஒரு கணினிப் பொறியாளர் போலப் பேசுகிறார். எடப்பாடி பழனிசாமி அவர்களுக்குச் சேக்கிழார் எழுதிய கம்பராமாயணம் மட்டும்தான் தெரியும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். கடைசியில் பார்த்தால், அவர் பெரிய கணினி வல்லுநராகவும் இருக்கிறார். விட்டால் மைக்ரோ சாப்ட்டுக்கே யோசனை வழங்குவார் போல தெரிகிறது.

உண்மை என்னவென்றால், நாம் வழங்கப்போகும் மடிக்கணினி, கல்லூரி மாணவர்களுக்கு எல்லா வகையிலும் பயன்படும் வகையில் நவீனத் தொழில்நுட்பத்தோடு, இன்னும் சொல்லப்போனால் செயற்கை நுண்ணறிவு (AI) பொருந்திய தொழில்நுட்பத்தோடுதான் தயார் செய்யப்பட்டுள்ளது. உறுதியாகச் சொல்கின்றோம், இந்த மடிக்கணினி திட்டம் கல்லூரி மாணவர்களின் வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு நிச்சயமாக எடுத்துச் செல்லும்.

எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு தமிழ்நாட்டு மாணவர்களின் வருங்காலம் முக்கியம் கிடையாது. அவருக்கு அவரின் சொந்தப் பிரச்சினைதான் முக்கியம். எனவே அ.தி.மு.கவும், பா.ஜ.கவும் மறைமுகமாகக் கூட்டணி அமைத்து இப்பொழுது வந்திருக்கிறார்கள். பா.ஜ.கவிற்குப் பழைய அடிமைகள் போதாது என்று இப்பொழுது புதிய அடிமைகளைச் சேர்ப்பதற்கான பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அது யார் என்று தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியும், நிர்வாகிகளாகிய உங்களுக்கும் தெரியும். இவர்கள் இரண்டு பேரையும், இந்த ஒட்டுமொத்தக் கூட்டத்தையும் ஓட விடவேண்டிய தேர்தல் 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல்.

இன்னும் சரியாக 100 நாட்கள்தான் நம் கைகளில் இருக்கின்றன. இந்த 100 நாட்களும் களத்தில் வேலை செய்து நம் தி.மு.கவின் வெற்றிக்கு உழைக்க வேண்டும். தலைவர் நமக்கு ஓர் இலக்கு கொடுத்திருக்கிறார். 'வெல்வோம் 200, படைப்போம் வரலாறு'. குறைந்தபட்சம் 200 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். நான் தமிழ்நாடு முழுவதும் மக்களைச் சந்தித்துக்கொண்டிருக்கிறேன். மக்களின் வரவேற்பு, மகளிர், மாணவர்கள் இவர்களுடைய எழுச்சியையெல்லாம் பார்க்கும்போது 200 அல்ல, அதற்கும் அதிகமான தொகுதிகளில் நிச்சயம் வெற்றி பெறுவோம்.

நம்முடைய கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும் என்றால், நம்முடைய தலைவர் அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டும் என்றால், நாம் அனைவரும் களத்தில் இறங்கி வேலை செய்ய வேண்டும். அந்த கடமை நமக்கு இருக்கிறது. குறிப்பாக, தி.மு.கவில் இருக்கக்கூடிய இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு அந்த கூடுதல் பொறுப்பு இருக்கிறது. எனவே களத்தில் நீங்கள் அடுத்த 100 நாட்கள் உங்களின் பணிகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய வட்ட, கிளை மற்றும் பாக (Booth) இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உட்பட வருகை தந்திருக்கின்ற அனைவருக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைச் சொல்லிக்கொண்டு, வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என்று கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் எழுச்சி மிக்க உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

இதில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாவட்டக் கழகச் செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தின் தலைவருமான கௌதமன், மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளரும் தாட்கோ தலைவருமான இளையராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்திக், துணை அமைப்பாளர்கள் டி.எஸ்.அசோக், தாமோதரன், கலையரசன், ஜி.ஆர்.கே.சுரேஷ், டேனியல், சத்யா, மாவட்டச் செய்தித் தொடர்பு குழுத் துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, இளம்பேச்சாளர் மகிழ்வன், நகர அமைப்பாளர் சத்யன் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.